8th November 1966]

East Coast Road

* 521 *Q.*—SRI V. SANKARAN: Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether there is any proposal to construct the East Coast Road from Madras to Kanyakumari; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI V. RAMAIAH: (*a*) Yes.

(*b*) Attention is invited to the paper [a] placed on the Table of the **House**.

திரு. எம். எஸ். செல்வராஜன்: மொத்தமாக, கன்னியாகுமரியில் இருந்து சென்னை வரையில் உள்ள கடற்கரை ரோட்டின் மொத்த நீளம் எவ்வளவு? அவற்றின் முழு பாகமும் தார் போடப் பட்டிருக்கிறதா? அதில் எந்தளவிற்குப் பூர்த்தியாகியிருக்கிறது? அவற்றை மத்திய அரசாங்கத்தின் கைக்கு மாற்றுவது என்ற முயற்சி எந்த அளவில் இருக்கிறது?

கனம் திரு. வெ. ராமைய்யா: ஸ்டேட்மெண்டைப் பார்த்தால் எவ்வளவு மைல் என்று தெரியும். மொத்த நீளம் 480 மைல்கள். எல்லாம் தார் போடவில்லை. சிலயிடங்களில் போட்டிருக்கிறார்கள். சிலயிடங்களில் ரோடு அகலமாக இல்லாமல் மட் ரோடாகயிருக் கிறது. சிலயிடங்களில் பார்மேஷனே நடக்கவேண்டும். இந்த ரோட்டைப் பொறுத்தவரையில் ஏராளமான பாலங்கள் எல்லாம் கட்டவேண்டியிருக்கிறது. ஆகவே, மத்திய சர்க்கார் உதவி செய்ய வேண்டும் என்பதைத்தான் இந்த அரசாங்கம் வற்புறுத்திக் கொண்டிருக்கிறது. இந்தப் பதிலைப் பார்த்தால் நான்காவது திட்டத்தில் இறுதியான முடிவு எடுத்த பின்னரே இதன் நிலைமை தெரியும்.

திரு. கரு. சீமைச்சாமி: இந்த கன்னியாகுமரி–சென்னை சாலை நான்காவது திட்டத்தில் சேர்க்கப்படுமா? அப்படிச் சேர்க்கப் படாவிட்டால் சமீபத்தில் டெல்லி சென்று இந்தத் திட்டத்தைப் பரிசீலிக்க இருக்கிற முதல் அமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக சென்னை–கன்னியாகுமரி சாலையை ஏற்று நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா: நான்காவது திட்டத்தில் சேர்க்க வேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் கோரிக்கை. இது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது.

திரு. மா. தண்டாயுதபாணி: இந்த கோஸ்டல் ரோடு எறக்காழ ஆறு மாவட்டங்களை இணைப்பதாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அது தஞ்சை மாவட்டத்தில் எவ்வளவு மைல் தொலைவிற்கு இருக் கிறது? அதிலுள்ள பாலங்கள் எல்லாம் இந்தத் திட்டத்தில் சேர்க்கப்பட்டு கட்டப்படுமா?

---

a **Printed as Appendix III on pages 718–719.**

[8th November 1966

கனம் திரு. வெ. ராமைய்யா : ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கட்டவேண்டியதில்லை. பல மாவட்டங்களில் இருக்கின்றன. மொத்தமாக ப்ராஜக்டாக செய்யவேண்டும் என்பதுதான் பரிசீலனையில் இருக்கிறது. ஆகவே, ஒரு மாவட்டத்தில் பத்து அல்லது நூறு மைல்கள் இருந்தாலும் சரி ப்ராஜக்ட்டாகச் செய்து தேசீயச் சொத்தாக செய்யவேண்டுமென்ற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டிருக்கிறது. இந்த வேலை பூர்த்தியாகும்போது எல்லா ஆறுகளிலும் பாலங்கள் அமைக்கப்பட்டு நல்ல ரோடாக அமையும்.

திரு. து. ப. அழகமுத்து : கொடுக்கப்பட்டிருக்கிற இந்த அறிக்கையில் மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பப்பட்டு நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் முடிவான பிற்பாடுதான் எடுத்துக் கொள்ள வேண்டுமா வேண்டாமா என்பது தெரியும் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான்காவது திட்டத்திலேயே இதை வற்புறுத்திச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அவர்கள் அந்த வாக்கியத்தைப் படித்துவிட்டு எப்படி இப்படிச் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. நான்காவது திட்டம் முடிந்த பிறகு இல்லை நான்காவது திட்டத்தில் சேர்க்கவேண்டுமென்பது பரிசீலனையில் இருக்கிறது என்றுதான் எழுதியிருக்கிறது.

Cement control

* 522 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether the Government have reviewed the present position as to the availability of cement for the needs of common public, after the decontrol; and

(*b*) if so, the details thereof?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) & (*b*) Now that decontrol has been effected and Government demand reduced the general availability of cement would improve. No specific complaints of non-availability have been brought to the notice of Government.

Work Superintendents

* 523 *Q.*—Sri R. PONNAPPA NADAR : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether any proposal in regard to the fixation of pay of Work Superintendents allotted from the former Travancore-Cochin State is pending with the Government; and

(*b*) if so, its present stage?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) No, Sir.

(*b*) Does not arise.